# பொதுக்காலம் 2ம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு A

### இன்றைய வாசகங்கள்:

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 49: 3.5-6,

திருப்பாடல் 40: 1,3. 6- 9,

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய

முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 1-3 ,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1: 29-34

### திருப்பலி முன்னுரை:

இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்.

ஆண்டவரின் மக்களாக ஒன்றுகூடி வந்திருக்கும் இறை அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பு நிறைந்த வாழ்த்துகள் உரிமையாகுக. இந்த நாள் ஞாயிறு வழிபாடு ஒரு முகாமையான நோக்கத்தை இறைவனைத் தேடிவரும் அனைத்து மக்களுக்கும் வழங்கி நிற்கின்றது. அதைத்தான் இறைவாக்கினர் எசாயாவின் இறைமொழி நமக்கு வழங்குகிறது. ஆண்டவரின் மக்களுக்குக் கூறும் இம்மொழி ஆண்டவரை நம்பி வழிபட்ட இஸ்ராயேல் மக்களுக்குக் கூறுவது போல அவர் மீது நம்பிக்கை கொண்டுள்ள அனைத்து மக்களுக்கும் கூறப்படுகிறது. பலியையும் காணிக்கையையும் அவர் விரும்பவில்லை: எரிபலியையும் பாவம் போக்கும் பலியையும் அவர் கேட்கவில்லை: நம்முடைய தூய்மையான வாழ்வையும், பணி வாழ்வையுமே அவர் விரும்புகின்றார். எனவே நாம் அனைவரும் உமது திருச்சட்டம் என் உள்ளத்தில் இருக்கின்றது, உமது திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே, இதோ வருகின்றேன். என்னும் இலட்சிய தாகத்தை இதயத்தில் சுமந்து சென்று இறைவனை மகிமைப் படுத்துவோம், இறைவனின் சாட்சிகளாய் வாழ்வோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உமது திருவுளம் நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி அடைந்து பணிசெய்ய நீர் நியமித்திருக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: தூய ஆவியின் நிறை வல்லமையால் அவர்களை நிரப்பி, தீமைகளை முறியடிக்க வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மக்களுக்கு அமைதி அளித்து ஆசி வழங்கும் தந்தையே!**

உமது திருச்சட்டத்தை எம் உள்ளத்தில் இருத்தி, உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைந்து, அன்பிய சமுதாயமாக வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அஞ்சாதே என்று வாழ்த்தி புத்துயிர் தந்த எம் கனிவான தந்தையே எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களில் திருமுழுக்கின் வழியாக நாங்கள் பெற்றுக் கொண்ட அருங்கொடைகளை உணர்ந்த உம் வார்த்தைகளின்படி வாழ்க்கை நடத்தவும், வரும் தீமைகளிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுதலைப் பெற்றிட வேண்டிய வரத்தை எமக்கு அளித்திடுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நல்லாயனே இறைவா!**

நாங்கள் அனைவரும் எங்களின் வாழ்வில் கிறிஸ்துவை வெளிப்படுத்த தடையாக இருக்கும் கர்வம், ஆணவம், பொறாமை, போட்டி மனப்பான்மை போன்றவைகளை களைந்து கிறிஸ்துவுக்கு சான்று பகர்கிறவர்களாக திகழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எமக்கு மன்னிப்பு அளித்து எமக்கு புதுவாழ்வை வாக்களித்த தந்தையே இறைவா!**

எம் இளைய சமுதாயம் தனது வாலிப நாட்களில் நீர் தரும் நலன்களை கண்டுக் கொண்டு அதனை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள தூயஆவியானவரின் அருங்கொடைகளை அபரிமிதமாகப் பொழிந்தருளவேண்டும் என்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கீழ்ப்படிதலின் மகிமையை உம் திருக்குடும்பத்தின் வழியாக உணர்த்திய எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களில் இறைமகன் வாழ்ந்துக் காட்டிய அதே வழியை, நாங்களும் கடைபிடித்து, எங்கள் குடும்பங்கள் கோவிலாய் ஒளிர்ந்திட, எமக்கு சுயநலமற்ற அன்பும், அடுத்திருப்பவருடன் நட்பு பாராட்டும் நல்ல உள்ளங்களையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாதுகாப்பின் நாயகனே!**

எம் பங்கில் இருக்கின்ற நோயாளிகள், முதியவர்கள், கைவிடப்பட்டவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்து அவர்களை உமது அன்பில் திளைக்கவைக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

www.tamilcatholicnews.com